பக்கங்கள் எட்டு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 தை 12 புதன்கிழமை (26 - 01 - 2000) VALAMPURI ஒலி: 38

★ புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு முன்

# அரசும் எதிர்க்கட்சியும் இணக்கம்

# ஏற்பட சர்வதேச அழுத்தம் தேவை!

## தூதுக்குழுவிடம் கூட்டணி சம்பந்தன்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் கருத்தொருமித்த நிலைப்பாட்டை ஏற்படுத்தி ஏனைய தமிழ்க்கட்சிகளையும் இணைத்து மூன்றாம்தரப்பு மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளும், அரசும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத்த அழுத்தத்தைக் கொடுக்க சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்நாயகம் இரா. சம்பந்தன் இலங்கைக்கு வந்த இரு வெளிநாட்டுத் தூதுக் குழுக்களுக்கும் தனித்தனியாகவலியுறுத்திக் கூறியுள்ளார்.

கனடிய வெளிநாட்டமைச்சின் தென் ஆசியப் பிரதிநிதி றொபேட் பெர்ட்லி மற்றும் நோர்வே நாட்டின் வெளிவிவகார பிரதியமைச்சர் டெலீவ் ஹூண்டி, ஆகியோரிடமே சம்பந்தன் தன் கருத்துக்களை வலியுறுத்தியுள்ளார்.

'இலங்கையின் இனப்பிரச்சினை விடயம், விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் 3ஆம் தரப்பு மத்தியஸ்தத்துடனான பேச்சுக்கள் இடம்பெற வேண்டும்' என்றும் 'பேச்சுவார்த்தைகளுக்கு முன்னோடி நடவடிக்கையாக அரசுக்கும் எதிர்க்கட்சிக்குமிடையில் கருத்தொருமித்து பரஸ்பர உணர்வு வேண்டும்' எனவும் அவர் இரு தூதுக் குழுவினரிடமும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை இனப்பிரச்சினைத்தீர்வில் நோர்வே அரசாங்கம் ஆர்வம் கொண்டுள்ளதாக வெளியான செய்திகளின் பின்னணியின் இந்த விஜயம் அமைந்திருப்பது பல எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது என்றும் இலங்கையிலுள்ள இனப்பிரச்சினையைத் தீர்வுக்குக் கொண்டுவருவதில் இது

(8ம் பக்கம் பார்க்க)

### இனப்பிரச்சினைத் தீர்வு

## நோர்வே நாட்டுத் தூதுக்குழுவினர் தமிழ்க் கட்சிகளுடன் இன்று சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை வந்து சேர்ந்த நோர்வே முன்னேற்றம் மற்றும் வளர்ச்சித்துறைச் செயலர் டெலீவ்லுன்டி இன்று பல தமிழ் அரசியல் கட்சிகளுடன் சந்திப்புக்களை நடத்தவுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மத்தியஸ்த முயற்சிகளை முன்னெடுப்பதற்காக இலங்கை வரவுள்ள நோர்வே அமைச்சர் லூட்வொலபரின் விஜயத்துக்கு முன்னோடியாகவே இவ் வருகை அமைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

நேற்று இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் முக்கியஸ்தர்களுடனும் லீவ்லூன்ரே சந்திப்பு ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதனிடையே நோர்வேயின் ஓரிடத்தில் வைத்து நோர்வே அதிகாரிகளும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களும் பல சுற்றுப் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

## தூதுவரின் பொன்விழாச் செய்தி

(கொழும்பு)

இலங்கையும், இந்தியாவும் ஒன்றிணைந்து சர்வதேச பயங்கர வாதத்துக் கெதிராகக் குரல் கொடுக்க வேண்டும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சிவ் சங்கர் மேனன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் சுதந்திரப் பொன்விழாவை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். (கு-வ)

## வடக்கு-கிழக்கு பாடசாலைகளுக்கான இலவசப் பாட நூல்களை அனுப்புக!

### மாவை.சேனாதிராஜா வேண்டுகோள்

(கொழும்பு)

'வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்கள் தற்போது இடம் பெற்று வரும் யுத்தத்தினால்பெரிதும் பாதிப்படைந் திருப்பதனால் இந்த மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக அச்சிடப்பட்ட பாட நூல்களை இம் மாதம் 31 ஆம் திகதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும்' என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை.எஸ்.சேனாதிராஜா, கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரனவிடம் கடிதமூலம் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக கல்வி அமைச்சுக்கு அவர் அனுப்பி

(8ம் பக்கம் பார்க்க)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உரும்பிராயில் நேற்று கைதாகினர்

[உரும்பிராய்]

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் நேற்றுப் பிற்பகல்3-00 மணியளவில் இராணுவத்தினராலும், பொலிசாராலும் கைதுசெய்யப்பட்ட சம்பவம் உரும்பிராயில் இடம்பெற்றது.

உரும்பிராயில் இயங்கும் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் க, பொ. த, [சாதாரண] வகுப்பில் கல்விபயிலும் ஸ்ரீஸ்கந்த

( 8ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்து ஆண்களின் சடலங்களில் இரண்டு அடையாளம் காட்டப்பட்டது

### உறவினர்களிடம் சடலம் ஒப்படைப்பு

[வவுனியா]

மன்னார் குஞ்சுக்குளம் பகுதியில் இரவுநேரக் காவலுக்கு வயல் வாடிகளில் தங்கியிருந்த போது சுட்டுக்கொல்லப்பட்டதாகக் கருதப்படும் ஐந்து ஆண்களில் இரண்டு பேரின் சடலங்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

குஞ்சுக்குளத்தைச் சேர்ந்த மரிசால் சத்தியோகு (வயது60), பெர்ணாந்து

[8 ஆம் பக்கம் பார்க்க]

## கல்வயல் பகுதி நேற்று இராணுவத்தினரால் சுற்றி வளைப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி கல்வயல் பகுதி நேற்றுக்காலை 8.00 மணிமுதல் 10.00 மணிவரை இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு பலத்த தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இளைஞர், யுவதிகள் கல்வயல் கூட்டுறவுச் சங்கக் கடைக்கு முன்னால் கொண்டு செல்லப்பட்டு அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்டன. எனினும் எவரும் கைது செய்யப்பட்டதாகத் தகவல் இல்லை.

நீண்டகாலத்திற்கு பின்னர் இப் பகுதி சுற்றி வளைக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-77)

## கொழும்பில் ஊரடங்கு - சுற்றிவளைப்பு

# காவல் நிலையத்தில் தாயும்மகளும் பாலியல் வல்லுறவுக்கு ஆளாகினர்!

(கொழும்பிலிருந்து விசேட நிருபர்)

கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அண்மைக்காலமாக இடம் பெற்ற ஊரடங்குச் சட்டம் - சுற்றிவளைப்பு ஒன்றின் போது பம்பலப்பிட்டி காவல்நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தாயும் மகளும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் ஒன்று அம்பலத்துக்கு வந்துள்ளது.

'சுற்றி வளைப்பின்போது காவல் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்ட இரண்டு பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டமை தெரியவந்துள்ளது. என்று அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் தலைவரும் பிரபல சட்டத்தரணியும் மனித உரிமை வாதியுமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி வலம்புரிக்குத் தெரிவித்தார்.

தாயும், மகளும் காவல் நிலையத்தில் வைத்து பாலியல் வல்லுறவுக்குட்

(8ம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியின் கரையோரப் பகுதி வழமை நிலைக்குப் படிப்படியாக திரும்புகிறது

(யாழ்ப்பாணம்)

கைதடி நாவற்குழி, கோயிலாக்கண்டி, தச்சன்தோப்பு போன்ற பகுதிகள் தற்போது வழமை நிலைக்குத் திரும்பியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம், தச்சன் தோப்பு வரையான பாடசாலை பஸ் சேவை நீண்ட நாளின் பின்னர் நேற்று இடம்பெற்றதாகவும் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் கணிசமான அளவு மாணவர்கள் பாடசாலைக்கு சமூகம்

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

தமிழ் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம்

# "ஆக்கிரமித்தல்" மட்டுமன்றி, பாராளுமன்ற பிரதிநிதித்துவ எண்ணிக்கையை பலவீனப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சி!

- தேசிய சமாதானப் பேரவை

1948ம் ஆண்டு இலங்கை பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளிடமிருந்து சுதந்திரம் பெற்றுக்கொள்ளும் வரை தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் குறிப்பிட்டுக் கூறக்கூடியளவிலான முரண்பாடுகள் இருந்ததாக வரலாற்றில் காணப்படவில்லை. ஏகாதிபத்தியவாதிகளால் இந்நாட்டின் பிரபு வர்க்கத்திடம் அரச அதிகாரம் கைமாற்றப்பட்டதோடு, மொழி அடிப்



ஜி.ஜி. பொன்னம்பலம்

படையில் பிரிந்திருந்த இனங்களுக்கிடையில் வேறுபாடுகள் தோன்ற ஆரம்பித்தன. இலங்கைக்கு ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து சுதந்திரத்தைக் கொள்வதற்கான இயக்கத்தில் தமிழ், சிங்கள மற்றும் வேறு பேதங்கள் இல்லாது நன்றாகத் தாய் நாட்டின் மைந்தர்கள் என்ற வகையில் அதில் கலந்து கொண்ட மக்கள் பகுதியினர் சுதந்திரம் கிடைத்தபின், பிரிந்து வேறுபட்டு இன்று ஒருவரையொருவர் சாடிக் கொள்ளுமளவிற்கு இந்நிலைமை பூதாகரமாக உருவெடுத்திருப்பது உண்மையிலே வேதனை தரும் விடயமாகும். இத்தகைய பாரிய அளவிற்கு இப்பிரச்சனை வளர்ச்சியடைவதற்கு ஏதுவான காரணங்களாகக் கொள்ளக்கூடிய விடயங்கள் எவை என்பதை நாம் திரும்பிப் பார்ப்பது அவசியமாகும்.

**சுதந்திரத்திற்குப் பின் உடனடியான பிரச்சனை:**

சுதந்திரம் கிடைத்த உடனடியாகவே எழுந்த முதல் பிரச்சனை நாட்டின் தேசியக் கொடியைப் பற்றியதாகும். நாட்டின் தேசியக்கொடியைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு தமிழ் பிரதிநிதிகள் எழுப்பிய கேள்விகளுக்கு உரிய தீர்வு காணப்படாமலேயே சிங்கள உருவத்துடனான கொடி தேசியக் கொடியாக அறிவிக்கப்பட்டது. சிங்கக்கொடி முற்று முழுதாகவே சிங்களவர்களின் கொடி எனக் கொண்ட தமிழ் மக்கள் இலங்கைக்கொடி, தமிழ் மொழி பேசுகின்ற மக்களை உரியவாறு பிரதிநிதித்துவம் செய்கின்றவாறு உரியமுறையில் தயாரிக்கப்படவில்லை எனவும் அது பலவந்தமாகவே நம்மீது சுமத்தப்பட்டதாகவும் குற்றம் சாட்டினர்.

**வாக்குரிமை பறிக்கப்பட்டமை:**

1948ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இந்திய பாகிஸ்தான் பிரஜாவுரிமைச் சட்டம் மூலமாக மிகப் பெரும் எண்ணிக்கையான இந்திய வம்சாவழித் தோட்டத் தமிழ் தொழிலாளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. பாராளுமன்றத்தில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்காக மட்டுமன்றி அவர்களின் சிவில் உரிமைகளைப் பறிப்பதற்குமாகவே இவ்வாறு செய்யப்பட்டதெனத் தமிழ்க் கட்சிகள் குரல் எழுப்பின.

**சிங்களக் குடியேற்றங்கள்:**

கல்லோயாத்திட்டம் மற்றும் வேறு திட்டங்களின் ஊடாகத் தமிழ் மக்கள் வாழுகின்ற பிரதேசத்தில் சிங்கள மக்களைக் கொண்ட கிராமங்கள் அரசாங்கத்தினாலேயே ஏற்படுத்தப்பட்டமை மற்றும் தமிழ்ப் பிரதேசங்களில் செய்யப்பட்ட திட்டமிட்ட குடியேற்றமானது தமிழ் பிரதேசங்களை ஆக்கிரமித்தல் மட்டுமன்றி அவர்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவ எண்ணிக்கைகளைப் பலவீனப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி எனவும் குறை கூறப்பட்டது.

**சிங்களம் மட்டும் சட்டம்:**

1956-ம் வருடத்தில் அரச கருமமொழியாக சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டம் காரணமாகத் தமது தாய் மொழி மூலம் அரசாங்கத்துடன் செயற்படுவதற்கு மட்டுமன்றி மொழிக்கொள்கை அடிப்படையிலான கல்வி, தொழில்விடயங்கள் மீது இது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் எனபதனால் இச் சட்



ஸ்.ஜே.வி.செல்வநாயகம்

டத்திற்குத் தமிழ் அரசியற் கட்சிகள் முற்றுமுழுதாகவே எதிர்ப்புத் தெரிவித்தன. இச்சட்டம் பாராளுமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்ட தினத்தில் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக காலிமுகத்திடலில் பாராளுமன்றத்திற்கு எதிரே சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட தமிழ் தலைவர்கள் காடையர்களினால் தாக்கப்பட்டனர்.

**தமிழ்க் கட்சிகளின் கோரிக்கை**

1956-ம் ஆண்டில் தமிழ் மக்களைப் பாதிக்கும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாகத் தமிழரசுக் கட்சியினால் அரசுக்கு மூன்று கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாகச் சமஷ்டி அரசியல் அமைப்பை உருவாக்கல், சிங்களம் மற்றும் தமிழ் மொழிக்கான சம அந்தஸ்து, தமிழ் பிரதேசங்களில் அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை நிறுத்துதல் என்பன வாகும். இக்கோரிக்கைகளை அடிப்படையாக பேச்சுவார்த்தை நடைபெற்ற பின் 1957ல் அப்போதைய இலங்கைப் பிரதமராகவிருந்த எஸ். டபிள்யு. பண்டாரநாயக்காவிற்கும் தமிழ்க்கட்சியின் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்குமிடையில் பண்டா, செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தானது. இவ் ஒப்பந்தத்தின் கீழ் அப்போதைக்கு முனைப்படைந்திருந்த பல பிரச்சினைக்குத் தற்காலிகமாகவேனும் தீர்வு முன் வைக்கப்பட்டிருந்தாலும் சிங்கள இனவாதிகள் உட்பட அப்போதைக்கிருந்த எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சியின் பெரும் எதிர்ப்புக் காரணமாக அது அமுல் நடாத்தப்படாமலே 1958 ஆகின்றபோது செயலிழந்தது.

> இலங்கையின் வரலாறு என்னும் நூலில் இருந்தும் ''இன்ரநாஷனல் அலார்ட்'' அமைப்பின் ''அரசு-தமிழ்க்கட்சிகளின் பேச்சுவார்த்தைகள், இணக்கங்கள், அறிவித்தல்கள் மற்றும் கொள்கைகள்'' ஆவணத்திலிருந்தும், வேறு தகவல்களின் அடிப்படையிலும் இக்கட்டுரை தயாரிக்கப்பட்டுள்ளது.
>
> மொழிமாற்றம் - ஆனந்தன்

**1958 சிறி எதிர்ப்பு**

சிங்களம் மட்டும் கொள்கையின் அடிப்படையில் வாகனங்களுக்கான ஆங்கில எழுத்துக்களைச் சிறி எழுத்தாக உபயோகிக்க வேண்டுமென்ற அரசின் தீர்மானத்தை எதிர்த்துத் தமிழ்க்கட்சிகள் குரல் கொடுத்த நிலையில் இலங்கை வரலாற்றில் முதல் தடவையாகச் சிங்கள, தமிழ் மக்கள் மத்தியில் வன்முறை, குழப்பங்கள் ஏற்பட்டன. இதனால் தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் அமைந்திருந்த தேசிய உணர்வு கலைந்து விலகிச் சென்றனர். இதனால் இனவாதம் மேலோங்கி வளர்வதற்கு வாய்ப்பாக அமைந்தது.

**1960ல் தமிழரசுக்கட்சியின் குறைந்தபட்சக் கோரிக்கைகள்:**

1960-ம் ஆண்டு தமிழரசுக் கட்சியின் ஆகக் குறைந்த கோரிக்கையை சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஐக்கிய தேசியக்கட்சிக்கும் சமர்ப்பித்திருந்தனர். 1957 இருந்து



பண்டாரநாயக்க

செய்து கொள்ளப்பட்ட செல்வா - பண்டாரநாயக்கா ஒப்பந்தம் அமுல் செய்யப்படுமென ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தமிழரசுக்கட்சிக்கு வழங்கிய உத்தரவாதத்தின் அடிப்படையில் தமிழரசுக் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை 1960 தேர்தலில் ஆதரித்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தேர்தலில் வெற்றி பெற்றபின் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியது. அதற்குப்பதிலாக 1957 ல் நிறைவேற்றப்பட்ட சிங்களம் மட்டும் சட்டத்தை 1961ல் அமுல் படுத்தியது. தமிழ்மொழி அமுலாக்கலுக்கு இருந்த அரசியல் அமைப்பின் 29 வது சரத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. இதனை எதிர்ப்பதற்கு தமிழரசுக்கட்சி உட்பட தமிழ்க் கட்சிகள் 1961 ல் அறவழியில் சாத்வீகப் போராட்டமொன்றை நடாத்தினர். இப் போராட்டம் பொலிஸ், இராணுவ அதிகாரங்களைப் பயன்படுத்தி அரசினால் அடக்கப்பட்டது. (தொடரும்)

## மாமுனையில் தரம் 5 இற்குமேல் கல்வி பயில முடியாது மாணவர் அவதி

(செம்பியன்பற்று)

வடமராட்சி வலய மருதங்கேணிக் கோட்டத்தில் அமைந்துள்ள மாமுனை அ.மெ.ரி.க் கமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 5 இற்கு மேல் இல்லாமையால் அப்பகுதி மாணவர்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

1996 ஆம் ஆண்டின் முன் அதாவது இடப்பெயர்வின் முன்பு தரம் 8 வரை இப்பாடசாலையில் வகுப்புக்கள் இருந்த போதிலும் தற்போது தரம் 5 வரையுமே இயங்க வடமராட்சி கல்வி வலயம் அனுமதி வழங்கியிருக்கிறது.

இதனால் மாணவர்கள் 3 மைல்களுக்கு அப்பால் கால் நடையாகச் சென்று கல்வியைத் தொடர வேண்டிய நிலை எற்பட்டுள்ளது.

இந்த நிலையை மேற்படி பகுதி பெற்றோர் ஆசிரியர் சங்கம் வடமராட்சி கல்விப் பணிப்பாளருக்குச் சுட்டிக் காட்டி உள்ளனர்.

(க-42)

## பெறுபேறுகள் வெளிவந்தன

(வண்ணார்பண்ணை)

யாழ்.இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் சென்றவருடம் முறைசாராப் பயிற்சிகல்வித்திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட தையல் பயிற்சி நெறியின் இறுதி பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சியில் பங்குபற்றிய மாணவர்கள் பாடசாலை நேரத்தில் தமது பெறுபேறுகளை பார்வையிடலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க-14)

## ஒய்வூதியருக்கு புதிய சுற்று நிருபம்

இந்த மாதம் முதல் நாலாயிரம் ரூபாவிற்கு குறைவான ஓய்வூதியம் பெறுவோருக்கு மேலதிகமாக 400 ரூபா வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஓய்வூதிய திணைக்களத்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் உள்ளூராட்சி ஓய்வூதியப் பிரிவுகளில் உள்ள பிரதம கணக்காளர்கள் மேற்படி சுற்று நிருபப்படி செயற்பட பணிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச துறை ஓய்வூதியம் பெறுவோருக்கு நிவாரணம் அளிக்கும் திட்டத்திற்கமையவே இது நடைமுறைப்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-4)

## சுற்றிவளைப்பு

மந்துவில் கிழக்கு பகுதி நேற்றுக் காலை 7 மணியளவில் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

அப்பகுதி மக்கள் மந்துவில் தபால்கந்தோருக்கு அருகில் கூட்டிச்செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

எவரும் கைதுசெய்யப்பட்டதாக தகவல் இல்லை.


கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி
A/L DAY CLASS
வணிகப்புள்ளி
யாழ் ஆசிரியர்
திரு. T. தவசேகர்
ஆரம்பம் 26-01-2000
மு. ப. 8.00 மணிக்கு
நிர்வாகி
(00120)

ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
புதிய வெளியீடு
விஜய் ஷாலினியின்
கண்ணுக்குள் நிலவு
(CD பிரதி)
காட்சிகள்
10. 30, 2. 30 (ப.நே)
(00115)

நாகம்ஸ்
சுன்னாகம்
சரத்குமார்
தேவயாணியின்
சூரிய வம்சம்
(ரீல்ஸ்)
11:00-2:30 (பு.நே)
(00116)

# கும்பாபிஷேகச் சிறப்புச் செய்தி

## பாலை வனத்தில் தடாகம்

ஹீப் பள்ளியில் சிவகாலம் தங்கிய ஸ்ரீராகவேந்த்ர ஸ்வாமிகள் தனது சீடர்களுடன் பண்டாரி புரத்தை நோக்கி சென்று கொண்டிருக்கையில் செடி கொடிகள் நீர் நிலை அற்ற மணல் பரப்பான பாலைவனத்தைத் தாண்ட வேண்டி இருந்தது. அப்படிப் போகும்பொழுது தனது சீடர் ஒருவரின் மனைவி நிறை கர்ப்பிணியாக நடக்க இயலாது விழுந்து படுத்துவிட்டார். நாவறட்சியாலும், களைப்பு மேலீட்டாலும் அவரால் ஓர் அடியேனும் எடுத்துவைக்க முடியவில்லை.

இதை உணர்ந்த ஸ்வாமிகள் தனது கஷாய வஸ்த்திரத்தை நிழலாக காற்றில் பறக்கவிட்டு அதனால் அவர்களுக்கு நிழலைக் கொடுத்தார். பின்பு தனது பிரம்ம தண்டத்தால் ஒரு வளைவான கோடு கிறிவிட்டார் அங்கே நீர்த்தடாகம் ஒன்று உருவாகியது. பின்பு சில உலர்ந்த பழங்களையும் கொடுத்து ஆசிர்வதித்து பிரசவம் ஆனபின் தன்னை வந்து சேருமாறு ஆசி கூறி யாத்திரையைத் தொடர்ந்தார். இன்றும் ஸ்வாமிகளால் உருவாக்கப்பட்ட நீர் தேக்கம் தண்ட தீர்த்தம் என வழங்கப்பட்டுவருகிறது.

- செல்வா!

## சிந்துகவி பாடிடுவோம்

இந்துமத ஸாரத்தைப் பிழிந் தெடுத்தே
இறை பக்தி அன்பு அகிம்ஸை தயை
காருண்யம்
தந்து மத்வக் கொள்கைதனைத் தரணி மீதில்
தேனெனவே தித்திக்க தந்த கவி
முத்துமஹா கவியான ராகவேந்த்ரர்
முத்துவழி காட்டிடவே பன்னூல் தந்தார்
சிந்துகவி பாடிடுவோம் ராகவேந்த்ரர்
செங்கமலப் பாதமலர் பூசை செய்வோம்.

— ஸ்ரீ ராகவேந்த்ர கானம் —
பிரம்மஸ்ரீ க. வீரமணிஐயர்.

## உன்போலொருவருளரோ எமக்கையா

பல்லவி

உனையன்றித் துணை யாரையா? ஸ்ரீராகவேந்த்ரா
தனைத் தானறிந்து நல்ல சத்சித் ஆனந்தம் பெற

அநுபல்லவி

அனைத்தையுமே உணர்ந்த அருள்ஞானச் சுடரே!
முனைப்பயன் இன்றியும் முடிவிலின்பம் தர
(உனையன்றி)

சரணம்

என்பே உருகும்நுண் உணர்வோடு பாடிட
இன்பே பெருகும் நல் இசைதந்த ஜோதியே!
அன்பே உருவாய்நின் றருள்கின்ற ஞானியே!
உன்போ லொருவரிங் குளரோ எமக்கையா?
(உனையன்றி)

நாடும் காடும் போற்றும் நல்வாழ்வு கண்டாய்
பாடும் உன் அடியாரைப் பரிந்துய்யச் செய்தாய்
ஓடும் பொன்னும் ஒன்றாகவே நினைந்தாய்
ஏடும் குருவுமின்றி எழில்ஞான இசை தந்தாய்
(உனையன்றி)

கருதும்பே ரானந்தக் கடல்தன்னில் நாம்மூழ்க
தருமநெறி தன்னைத் தரணிக்கே தந்திட்டாய்
குருவாக உனைப்போற்றிக் கொண்டாடும் அன்பர்க்கு
அருட்ஜோதி வடிவாய் நின் றருள்கின்ற முகிலே
(உனையன்றி)

நாயன்மார்க்கட்டு
இராசையா. குகதாசன்

## மந்த்ராயமஹான் ஸ்ரீ ராகவேந்த்ர ஸ்வாமிகள் அருளும்' அருள்ஆசிகள்

யுகங்கள் நான்கு அவை கள் க்ருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம் கலியுகம் இந்த கலியுகத்தில் மஹான்களுக்கு மஹானாக ஸ்ரீ ராகவேந்த்ரர் திருப்பதி வெங்கடாசலபதியின் அருள் ஆசியால் கோபிகாம்பாளுக்கும், திம்மண்ணபட்டருக்கும் மகனாகப் பிறந்தார். இப்பேற்பட்ட மஹான் அவதரித்த கால கட்டத்தில் நாமும் வாழ்ந்து வருவது நாம் செய்த புண்ணியம் ஸ்வாமிகள் ராகவேந்த்ரர் ஓர் இந்துப் பெரியவர் கும்பகோணம் அவர் பிறந்த இடம்.

சந்திர ஒளியை ஒத்த முக தேஜையுடன் விளங்கின ராகவேந்த்ரரின் தாய் தந்தை இட்ட பெயர் வெங்கடநாதன் வெங்கடவன் தந்த பிள்ளை அல்லவா. அதனால் வெங்கடநாதன் என நாம காரணத்துடன் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு வாழ்ந்து வரும் காலத்தில் அன்னை சரஸ்வதி தேவியின் கட்டளைக்கு இணங்க சன்னியாசத்தை ஏற்றார்.

பின்பு தனது இறுதிக் காலத்தை நிர்ணயித்த ஸ்வாமிகள் காய்ந்து வரண்ட மாஞ்சாலம் குறிச்சி மாஞ்சாலம் புவனேஸ்வரி அம்மனின் வேண்டுதலுக்கு அமைய கி. பி. 1671 தை மாதம் வியாழக்கிழமை அதிகாலை சுக்கில பட்ஷத்தில் ஆந்திர பிரதேசத்தில் கர்னூல் ஜில்லாவில் துங்க பத்திரா நதிக் கரையோரம் தனது ப்ருந்தாவனத்தை அமைத்து அதில் 700 வருடங்கள் ஜீவசமாதியாக இருப்பேன் என்று அருள் மொழிந்தார். அதே போல் உலகெங்கிலும் 700 ப்ருந்தாவன ம்ருத்திகா ஜீவசம நதிகள் தோன்றும் என்றும் உரைத்தார்.

ஸ்வாமிகளின் மூல ப்ருந்தாவனம் ஆந்திர பிரதேசத்தில் அமைந்துள்ளது. மூல பிருந்தாவனத்தை சார்ந்த ம்ருத்திக்காக்கள் பல இடங்களில் தோன்றி உள்ளன. அதில் ஒன்று தான் கோவில் வீதி நல்லூரில் அமைந்துள்ள ஸ்ரீராகவேந்த்ர ம்ருத்திக்கா.

1988ம் ஆண்டுஸ்வாமிகளின் வேண்டுதலுக்கு இணங்க நல்லூர் ம்ருத்திக்கா நிர்வாகி மந்திராலயம் சென்று ஸ்வாமிகளின்திருவிக்கிரஹம் திருமன் சாளக்கிராமங்கள் சகிதம் 1989 இல் நல்லூர் ம்ருத்திக்காவில் மாஞ்சாலம் புவனேஸ்வரி, லிங்கநாதர், ஆகியவர்களுடன் நல்லை குருமஹா சன்னிதானத்தின் ஆசியுடனும் மிகவும் கோலாகலமாக கும்ப அபிஷேகமும் பிரதிஷ்டையும் செய்யப்பட்டு தின ஆராதனை பஜனை. நடைபெற்றுவருகின்றன.

எஸ். சிவசிதம்பரம்
(ஸ்ரீ ராகவேந்த்ர ம்ருத்திகா ஆலயம்)

(4 ஆம் பக்கம் பார்க்க)

இரண்டாவது கும்பாபிஷேகம்
காணும்
சிறீ ராகவேந்த்ர சுவாமியின்
நிகழ்ச்சிகள் சிறப்புற வாழ்த்துகின்றோம்.
முருகன் ரேடர்ஸ்
56A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(கி/28)

இன்று கும்பாபிஷேகம் காணும்
சிறீராகவேந்த்ர மடாலய பரிவார மூர்த்திகளின்
ஆசிவேண்டி நிற்கும்
கெங்கா உலோகக் கலையகம்
கோவிலுக்கு தேவையான கொடிஸ்தம்பம், கலசம், திருவாசிகள், அசைமணி மற்றும் அனைத்து வேலைகளும் திறம்பட செய்யுமிடம்
எல். கெங்காதரன்
314, கே. கே. வீதி, யாழ்ப்பாணம்.
(கி/29)

ராகவேந்த்ர சுவாமிகளின்
கும்பாபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகின்றோம்
ரூபி நகை மாளிகை
111/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
★ நவநாகரீக டிசைன்களுக்கு
★ உத்தரவாதத்திற்கு
★ உறுதியான வேலைக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்
ஓடர் நகைகள் குறித்த தவணைகளில் செய்து கொடுக்கப்பெறும்.
சுத்தமான 22 கரட் தங்கத்தில் குறித்த தவணையில் நகைகள் செய்து கொடுக்கப்பெறும்.
Fax - T. P. 2828
(கி/26)

சிறீ ராகவேந்த்ர மடாலயம்
கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்
த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
அதிரடி "மலிவு விற்பனை
★ கண்கவர் டிசைன்களில் ★
★ கூறைவகைகள், திருமணப்பட்டுபுடவைகள்
★ காஞ்சிபுரம் பட்டு சாறிவகைகள்
★ பெனாறிஸ் பட்டு சாறி வகைகள்
★ பட்டு வேட்டிகள்
★ மைசூர்சில்க், காயத்திரி சில்க்
★ காஷ்மீர், பூனம், சிபோன் சாறிவகைகள்
★ பலவர்ண பிளவுஸ் பீஸ்வகைகள்
★ ஆண்கள், பெண்களுக்கான றெடிமேட் ஆடை வகைகள்
★ கேட்டிங் சூட்டிங் வகைகள்
மற்றும் அனைத்து வகையான புடவை வகைகளையும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.
352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 2555
(கி/31)

## புலமைப் பரீட்சை வினா இல 1 விடைகள்

(1) வாழை (2) கதலி (3) நல்ல பசளை இட்டு
(4) நான் (5) நாங்கள் (6) வாழ்கிறோம்
(7) நிகழ்காலம் (8) தீய (9) இரண்டு தடவை
(10) மரவள்ளி (11) புத்திமதி (12) பயம்
(13) பாம்பு (14) அடக்கம் (15) வீடு
(16) அந்தம் (17) பிறப்பு (18) பகல்
(19) சிரி (20) நீளம் (21) MANGO
(22) WEDNESDAY (25)NOSE (24) HAIR
(25) பெரும்பாலான நோய் பரப்பும் அங்கிகள் இறந்து விடும் என்பதால்
(26) ஒரு விடயத்தைப் பற்றி நன்கு தெரியாமல் எதிலும் ஈடுபடக்கூடாது
(27) எல்லாத் தாவரங்களும் இடம்பெயரும் அசையும்
(28) மண்நீர், மண்வளி என்பன போதுமான அளவு இருக்கும்.

## ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை
### வினா இல - 01

அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம்.

(1) தவயோகராசா-துளசிகா வண்ணார்பண்ணை கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
(2) சி. புவிசுதேஸ் சாவகச்சேரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி.
(3) கிறேசியன் - றொக்கின்சன் யாழ்ப்பாணம், புனித பத்திரிசியார் கல்லூரி.
(4) ஆசைப்பிள்ளை - மேரிதேவான்சலின் பழைய பூங்கா வீதி, புனித மரியாள் வித்தியாலயம்.
(5) துரைசிங்கம் - சரண்யா புத்தூர் கிழக்கு, ஸ்ரீ சோமஸ் கந்தாக் கல்லூரி.
(6) சு. அபிராமி பளை, பளை மத்திய கல்லூரி.
(7) சி. விஜேந்தினி கொழும்புத்துறை, துரையப்பா வித்தியாலயம்.
(8) கோவிந்தபிள்ளை - அர்ச்சுனன் சாவகச்சேரி, சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
(9) குலசேகரம்-பகீரதன் திருநெல்வேலி, திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.
(10) நித்தியானந்தராஜா - சரணியா ஆனைக்கோட்டை, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
(11) இ. கூரன் சுழிபுரம், ஐக்கிய சங்க சைவவித்யாசாலை.
(12) சுப்பிரமணியம் - சுதர்சன் நாவாந்துறை, யா / இந்து ஆரம்பப் பாடசாலை.
(13) கஸ்தூரி - தயாளன் கைதடி மேற்கு, சுண்டுக்குழி மகளிர், கல்லூரி.
(14) சிந்துஜா-சந்திரகாந்தன் கொக்குவில் மேற்கு, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.
(15) கி. துவாரகா திருநெல்வேலி, இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
(16) ப. லக்ஷிகா யாழ்ப்பாணம், இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
(17) சிவராசா-பிரியதர்சினி உரும்பிராய் றோ.த.க. பாடசாலை.
(18) சுப்பிரமணியம் - சுதர்ஷன் நாவாந்துறை, யாழ். மத்திய கல்லூரி.
(19) செல்வரெட்ணம். லோஜின் புன்னாலைக்கட்டுவன், மகாஜனாக் கல்லூரி.
(20) கு. மகிந்தன் நல்லூர், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(21) ஜெ. கிரிஜா மட்டுவில், சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்.
(22) சி. சுபாங்கி யாழ்ப்பாணம், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(23) ர.ப்பிறுகஸ்வினி யாழ்ப்பாணம். யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(24) ஜே. மேரிறதனி குருநகர், கன்னியர்மடம் மகாவித்தியாலயம்.
(25) லோ. கரிகாலன் வேலணை, சேர். வை. து. ம. ம. வித்தியாலயம்.
(26) சி. சு. ஷிராண்கேசன் நவாலி, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(27) அ. இரகுராம் சித்தன்கேணி, யாழ்ப்பாணக் கல்லூரி.
(28) சி. துவாரகா கரவெட்டி, மணியகாரன் தோட்டம் வித்தியாலயம்.
(29) அ. அலோஜிஸ்-பவன்ராஜ் கரவெட்டி, அரசடி மெ. த. க. பாடசாலை.
(30) சி. சிவகுமார் திருநெல்வேலி (மாங்குளம்), திருநெல்வேலி அ. த. க. பாடசாலை.
(31) ம. சவுதினிஜோய் நவாலி, நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை.
(32) நா. அனோஜினி யாழ்ப்பாணம், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(33) சி. கஜதீபன் கைதடி, முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம்.
(34) பே. பிறேமறாகா கொடிகாமம், கொடிகாமம் இ.ம. வித்தியாலயம்,
(35) ஸ். சார்ள்ஸ் கல்வயல், ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம்.
(36) ஆ. சஞ்ஜியா நாகர்கோயில், நாகர்கோயில் மகா வித்தியாலயம்.
(37) ச. ஷாமளை திருநெல்வேலி, யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
(38) சி. சிவறஞ்சினி இணுவில், தாவடி இ. த. க. பாடசாலை.
(39) கோ. கிருஷாந்தி இணுவில், இணுவில் மத்திய கல்லூரி.
(40) இ. மீநிலா நல்லூர் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.
(41) கயல்விழி இளவாலை, இ/கன்னியர்மடம் மகாவித்தியாலயம்.

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள்

★ சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. 70 — A = 30 எனின் A யிற்கு வழங்கக்கூடிய பெறுமதி
(1) 30 (2) 40 (3) 100

2. வித்தியாசமான எண் கூட்டம் எது?
(1) 1, 2, 3, 5, 6 (2) 3, 1, 2, 5, 6 (3) 1, 3, 2, 4, 6

3. பேருந்து ஒன்றில் இருந்த பிரயாணிகளில் அதிகமானோர் பெண்களாவர் ஆகவே பேருந்தில்
(1) ஆண்கள் இல்லை (2) பெண்கள் மட்டும் உள்ளனர் (3) குறைந்தளவு ஆண்கள் உள்ளனர்.

4. இலங்கையில் மின் உற்பத்திக்கு பயன்படும் இயற்கை வளம்
(1) சூரியவெப்பம் (2) நீர் (3) காற்று

5. இலங்கையில் பயன்படுத்தும் நாணயங்களில் பூ வடிவ ஓரம் உடைய நாணயம்
(1) ரூபா 2. 00 (2) சதம் இரண்டு (3) ரூபா 1. 00

★ சரியான விடையினை புள்ளிக்கோட்டில் எழுதுக.

6. பிந்து, நந்து ஆகிய இருவரும் சுந்துவின் பிள்ளைகள் ஆனால் பிந்து சுந்துவின் மகனல்ல. பிந்து சுந்துவிற்கு என்ன முறை?
..............................

7. இலங்கையின் தேசிய மரம் எது?
..............................

8. LX — XL இனை சுருக்கி விடையை உரோமன் இலக்கத்தில் எழுதுக?
..............................

9. எமது நாட்டில் பதிவுத்தபால் ஒன்றிற்கு எவ்வளவு கட்டணம் அறவிடப்படுகின்றது?
..............................

10. பாம்பின் இளையது குட்டி போல பசுவின் இளையது ..............................ஆகும்.

★ சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடைப்பினுள் இடுக.

11. தீப்பெட்டி உருளை வடிவப் பொருளுக்கு உதாரணம் ஆகும். ( )
12. விளையாட்டுக்கள் மூலம் உடல் தசைகள் இறுக்கமடைந்து வலிமையாகும். ( )
13. எம்முடன் கற்கும் ஒவ்வொரு மாணவரையும் பட்டப்பெயர் கொண்டு அழைக்கலாம். ( )
14. அரச வைத்தியசாலைகளில் இலவசமாக மருந்தினைப் பெறலாம். ( )
15. நான்முகி ஒன்றிற்கு நான்கு முகங்கள் உண்டு. ( )

● கீழ்வரும் சொற்களில் ஒன்று ஏனையவற்றில் இருந்து வேறுபட்டது. அதன் கீழ்க் கோடிடுக.

16. (1) மா (2) பலா (3) வாழை (4) வேம்பு
17. (1) தமிழ் (2) ஆங்கிலம் (3) சிங்களம் (4) விஞ்ஞானம்
18. (1) சிவப்பு (2) குருதி (3) உதிரம் (4) இரத்தம்
19. (1) பிந்து (2) முல்லா (3) நந்து (4) சுந்து
20. (1) கதவு (2) ஜன்னல் (3) வீடு (4) அறை

'ஆக்கம் 'சுந்தர்'

**அன்பு மாணவச் செல்வங்களே!**

நீங்கள் அனுப்புகின்ற விடைகளைத் தனியான தாளில் எழுதி அனுப்பினால் மட்டும் போதும். ஆனால் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை மாத்திரம் தவறாது உங்கள் விடைத்தாளுடன் இணைத்து அனுப்புங்கள்.

இதிலுள்ள வினாத்தாள்களை சேகரித்து பயனடையுங்கள். (ஆ-ர்)

### கல்விப்பகுதி
"வலம்புரி"
இல, 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..............................

சொந்த முகவரி: ..............................

கற்கும் பாடசாலை: ..............................

மாணவர் கையொப்பம்: ..............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளை தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

## சுவீடன் குழு தீவகத்துக்கு வருகை

[நெடுந்தீவு]

சுவீடன் நாட்டைச் சேர்ந்த மூன்றுபேர் அடங்கிய குழுவொன்று அண்மையில் தீவுப் பகுதிக்கு சுற்றுலா ஒன்றை மேற்கொண்டுள்ளது. அண்மையில் யாழ். வந்த சுவீடன் நாட்டைச்சேர்ந்த அவதானிகள் அண்மையில் தீவுப் பகுதிக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிந்தனர்,

அரச திணைக்கள உத்தியோகத்தர்களையும், தனியார் துறையைச் சேர்ந்தவர்களையும் பொதுமக்களையும் சந்தித்து உரையாடிய மேற்படி குழுவினர் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்களைப் பற்றியும் அறிந்து கொண்டனர்,

மக்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்கு நேரிற்சென்ற அவர்கள் பொதுமக்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்தனர். [கு-82[

## நூல்கள் அன்பளிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்திவு பொது நூலகத்திற்கு முப்பதாயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு மகாவித்தியாலய முன்னாள் அதிபர் இரா. சின்னத்தம்பி மேற்படி நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளார். (க-09)

## இளைஞர் கைது

(யாழ்ப்பாணம்)

தாவலைஇயற்றாலையைச் சேர்ந்த சீவல் தொழிலாளியான பெரியதம்பி குகானந்தன் கடந்த 23 ஆம் திகதி அவரது வீட்டில் வைத்து வரணி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தற்போது வரணி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர் கைது செய்யப்பட்டதற்கான 'ரசீது' இராணுவத்தினரால் வழங்கப்பட்டுள்ளது.

இவரது கைது தொடர்பாக மனித கௌரவத்திற்கான மன்ற வட பிராந்திய இணைப்பாளர் ஐ. சிவராசாவிடம் முறையிடப்பட்டுள்ளது. (க)

## மந்த்ராய...

ஸ்ரீஸ்வாமிகளின்மகிமைகள் அற்புதங்கள் சொல்லில் அடங்கா. ஸ்வாமிகளை அறிந்தோர் சிலர், அறியாதோர் பலர் ஸ்வாமிகள் ஜீவசமாதி ஆகு முன்பு அருளிய அற்புதங்களிலும்பார்க்க ஜீவசமாதி ஆன பின்பு நிகழ்த்திய அற்புதங்கள் பல. அதேபோல் நல்லூரில் அமைந்துள்ள ப்ருந்தாவன ம்ருத்திக்காவின் தீர்த்தத்தைக் கொண்டுபலர் பலவித நோய்களில் இருந்து நோய் நீங்கப் பெற்றுள்ளனர். என்பது கண்கூடு. ஒவ்வொரு வருடமும் ஆவணி பூரணையின் இரண்டாம் நாளான துவாதியை திதியில் ஸ்வாமிகளின் திருவுருவம் ப்ருந்தாவன ப்ரலோதமாகும்.

நல்லூர் ம்ருத்திக்காவில் ஐந்து நாட்கள் பஜனை நாம சங்கீர்த்தனம், கச்சேரிகள் இவற்றுடன் ஐந்தாம் நாளானதுவாதியைதிதியில் திருக்கதவு சாத்தல் நடைபெறுகின்றன. ஆறாம் நாளான அன்று கருகு பிரசாதத்துடன் ப்ருந்தாவன ப்ரவேஷ விழா இனிதே நிறைவு பெறுகின்றன. இவ்வேளையில் 2000ம் ஆண்டு தைமாதம் 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.39 மணி ஸ்ரீராகவேந்த்ரரின் அருள் ஆசியுடன் பஞ்சமுக ஆஞ்சநேயர் சகிதம் இரண்டாவது மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

# வைத்தியகலாநிதி இ. தெய்வேந்திரன்

# ஓர் நடமாடும் பல்கலைக்கழகம்

## இன்று அவருக்கு அகவை அறுபத்தொன்று

**என். விஜயசுந்தரம்**
(ஆசிரியர் நல்லைக்குமரன் மலர்)

வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரனை அறியாத மருத்துவ உலகம் இருக்க முடியாது. உலக சுகாதார ஸ்தாபனம் முதல் அனைத்துலகப் பொது அமைப்புக்கள் வரை அவரை நன்கு அறிந்துள்ளமை அதற்குச் சான்றாகும். வசதிகளும், வாய்ப்புக்களும் கூடி நின்ற போதிலும் தான் பிறந்த மண்ணில் தன்மானத்துடன் மக்கள் பணியாற்றுவதே மனுநீதியென்பதில் இம்மியளவும் அசையாது பணியாற்றுபவர் அவர். அவரின் சேவையில் இம் மண்ணில் பற்றுதியோடு வாழும் மக்கள் மனநிறைவு கொள்கின்றனர்.

அனர்த்தங்களும், ஆறுதல் அற்ற நிலையும் வாழ்வில் வெறுப்பை வளர்க்கும் இந்நேரத்தில் தெய்வேந்திரம் ஐயா போன்ற சிலர் இன்னும் இம்மண்ணில் வாழ்கிறார்கள் என்ற உண்மை, வாழ்வின் உறுதிப்பாட்டில ஓர் ஒளிக்கீற்று என்பதை யாரும் மறுக்க முடியாது.

**மருத்துவப்பணி**

தனது 21 ஆவது வயதில் மருத்துவப் பணியை ஆரம்பித்த வைத்திய கலாநிதி தெய்வேந்திரன் ஐயா அவர்கள் இன்று 40 வருடப் பணியைப் பூர்த்தி செய்து விட்டார். மனித இயல்புகளுக்கப்பால் நின்று வள்ளுவன் கண்ட மருத்துவராக, மக்கள் பணியே மகேசன்பணி என்ற நிலையில் இன்முகத்துடன் இன்றும் ஆற்றும் சேவையை சாதாரண மானிடத்துடன் ஒப்பிட்டு நோக்க முடியாது.

யதார்த்த நிலையில் கோபமும், வெறுப்பும் கூடி நிற்கும் இவ்வேளையில் தெய்வேந்திரன் ஐயாவின் புன்சிரிப்பும், அமைதியான பேச்சும் எவரையும் வரவேற்கும் தன்மையும், காலம் உணர்ந்து உதவும் பண்பும் காண்போரை வியப்பில் ஆழ்த்துகிறது. மானிடப் பண்பை, மனிதநேயத்தை தேடும் மனிதத்திற்கு ''தெய்வேந்திரன்'' எனும் நாமம் ஆறுதலளிப்பதாக ஆற்றுப் படுத்துவதாகவே உள்ளது.

அவரிடம் மருத்துவ சிகிச்சைக்காகச் செல்பவர்களை விட தமது மனக்குறைகளைக் கூறி ஆறுதல் அடைபவர்களே அதிகம் எனலாம். எப்பிரச்சனையையும் எளிதாக்கிடும் திறன் மிக்க அவரைச் சந்தித்து ஒரு தடவை கதைப்பதன் மூலம், ஆலோசனை பெறுவதன் மூலம் ஆத்ம திருப்தியடைபவர்களும், சீர்மியம் பெறுபவர்களும் அநேகர் எனலாம்.

**தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியாக**

இலங்கையின் பல பாகங்களிலும் மருத்துவப் பணியாற்றிய வைத்திய கலாநிதி அவர்கள் 14 வருடங்கள் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியாகவும் பணியாற்றினார்.

இக்காலத்தில் இவர் ஆற்றிய பணியே இன்று வடக்குக் கிழக்கு மாகாணத்தில் குடும்ப மருத்துவ சேவை உயிர் வாழ்வதற்குக் காரணம் என்றால் அது தவறில்லை. அவரின் பயிற்சி வளாகத்தில் கற்றுத் தேறிய குடும்ப நல உத்தியோகத்தர்களும், தாதியருமே இன்று குடும்ப நல சேவையை முன்னெடுத்துச் செல்கிறார்கள்.

வைத்திய கலாநிதி தெய்வேந்திரம் ஐயாவின் வளாகத்தில் கற்றவர்கள் அறிவுப் புலம் மிக்கவர்கள், எந்தச் சவாலையும் எதிர் கொள்ளும் துணிவு மிக்கவர்கள், நம் தேசம் எனும் நாட்டுப்பற்றுடையவர்கள், அத்தகைய மனப்பாங்கை அவரிடம் பயின்ற ஒவ்வொருவரும் பெற்றுள்ளார்கள். என்பதை ஆய்ந்தறியும் அறிஞர் குழாம் ஏற்றுள்ளது.

**செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவராக**

யுத்த நெருக்கடிகளின் ஆயத்தங்கள் எதிர் காலத்தில் எத்தகைய சூழ்நிலையை ஏற்படுத்தும் என்ற தூரநோக்குப் பார்வையே இன்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணத்தில் இயங்குவதற்குக் காரணமாயிற்று. இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணப் பிரிவை இங்கு ஆரம்பித்து அதன் ஆரம்ப காலத் தலைவராக இருந்து அவர் ஆற்றிய பணியை வரலாறு ஒரு போதும் மறந்துவிடாது.

அவரின் காலத்தில் செஞ்சிலுவைச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அம்புலன்ஸ் சேவை அநேகரின் உயிரைக் காப்பாற்றியதையும் அவரின் தைரியமான காத்திரமான நடவடிக்கைகளையும் இன்றும் அவருடன் பணியாற்றிய செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் எடுத்துக் கூறுவதைக் கேட்க முடிகிறது. அப்பணி இன்றும் தொடர்வதற்கு அவரே மூல காரணம் என்றால் அது ஏற்புடையதே.

**யாழ்- மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரியாக.........**

1991 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மாநகரசபையின் சுகாதார வைத்தியஅதிகாரியாகக் கடமையைப் பொறுப்பேற்ற வைத்திய கலாநிதி அவர்கள் தனது பகுதி மக்களின் நலன்களைக் காப்பதில் பல்வேறு செயற்றிட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி வருகிறார்.

சுக நலனைக் காக்கும் அவரின் பணிகளில் எதிர்காலத்தில் நாம் எதிர்நோக்கவுள்ள சவால்களுக்கு முகங்கொடுக்கத் தயார் படுத்தும் செயற்பாடுகள் முதன்மைபெறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

அரச சார்பற்ற நிறுவனங்களின்உதவியுடன் போசாக்கு நிலையங்களை அமைத்து குழந்தைகளின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றும் பணியை பாராட்டாதவர்களே இல்லையெனலாம். சர்வதேச பொது அமைப்புக்களிடம் இருந்து வேண்டிய உதவியைப் பெறுவதற்கு அவர் மீது அவ்வமைப்புக்கள் கொண்டுள்ள நம்பிக்கையே காரணம் என்பதை இங்கு குறிப்பிடுவது சாலவும் பொருத்தமுடையதாகும்.

இதேவேளை யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்யும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அவரைச் சந்திக்கத் தவறுவதில்லை. யாழ்ப்பாண விஜயத்தில் வைத்திய கலாநிதி தெய்வேந்திரனை சந்திக்கத் தவறின் அந்த விஜயம் முழுமை பெறாது என்ற உண்மையை இங்கு வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் உணர்ந்துள்ளார்கள்.

**சமயப் பணி**

உடல் ,உள, சமூக, ஆத்மீக நிலையில் ஆரோக்கியமாக இருப்பதே உண்மைச் சுகம் என்பதை உலக சுகாதார ஸ்தாபனம் உறுதிப்படுத்தியுள்ளது. உடற் சுகத்தின் அத்திவாரம் ஆத்ம சுகம் என்பதை உணர்ந்த ஐயா அவர்கள் ஆத்ம சுகத்தைத் தரும் சமயப் பணியையும் மேற்கொள்ளத் தவறவில்லை.

யாழ். மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழுவின் தலைவராக இருந்து செய்யும் பணி செப்புதற்கரியது. அடைபட்ட ஆலயங்களைத் திறக்கவும், பூசை வழிபாடு இடம்பெறவும் வகை கண்டு, மக்களின் வாழ்வில் ஓர் நம்பிக்கையை ஏற்படுத்தி ஆத்ம சுகத்திற்கு வழிசமைத்தவர் அவர்.

இத்தகைய சிறப்புடைப் பண்புகளுக்குரித்தான வைத்திய கலாநிதி தெய்வேந்திரம் ஐயாவின் பணியும், பண்பும் ஓங்குவதற்குக் காரணமாக இருந்து வழிப்படுத்தும் ஐயாவின் இல்லத் துணை வைத்தியகலாநிதி திருமதி செ. தெய்வேந்திரன் அம்மாவின் பணியும் பக்குவமும் என்றும் போற்றுதற்குரியது.

அறிவாற்றலும், பல்துறைப் புலமையும், தீர்க்கதரிசனப் பார்வையும் கொண்ட வைத்திய கலாநிதி தெய்வேந்திரன் ஐயா நம்மவர்களில் நடமாடும் பல்கலைக்கழகம் என்றால் அது சாலப் பொருந்துடையதாகும்.

அவரின் பணியால் நம்மண் பெருமையடைகிறது, பூரிப்படைகிறது.

அகவை அறுபத்தொன்றை நிறைவு கொள்ளும் ஐயாவின் சேவை பல்லாண்டு தொடர வாழ்த்தும் மாணிடத்தில் நாமும் இணைந்து வியாகேசப்பெருமான் தாழ் பணிந்து வாழ்த்துகிறோம் வாழ்க பல்லாண்டு வாழிய பணி.

---

இல. நிர்வாக சேவைக்கு

# சிறுபான்மையினர் ஒதுக்கப்படுவது குறித்து அமைச்சரிடம் முறையீடு

(மட்டக்களப்பு)

அண்மையில் இடம்பெற்ற இலங்கை நிர்வாக சேவை பரீட்சையில் சிறுபான்மையினர் புறக்கணிக்கப்பட்டமை குறித்து மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் பெருந்தோட்டகைத்தொழில் அமைச்சர் ரெட்ணசிறி விக்கிரமநாயக்காவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற பொதுப் பரீட்சை மூலம் நிர்வாக சேவைக்கு 153 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இதில் தமிழ், முஸ்லீம் இனத்தவர்களில் தலா ஒவ்வொருத்தரே தெரிவாகினர். ஏனையவர்கள் பெரும்பான்மையினராவர்.

மேற்படி தெரிவில் இன விகிதாசாரம் பேணப்படாது போனால் இன்னும் 10 ஆண்டுகளில் நிர்வாக சேவையில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த ஒருவரேனும் இல்லாத நிலை தோன்றும் என செல்வராசா சுட்டிக்காட்டியுள்ளார்.

1996 ல் மேல் நீதிமன்ற உத்தரவின்படி 249-96 இன் பிரகாரம் இன விகிதாசாரம் பேண முடியாதென அமைச்சர் ரெட்ணசிறி விக்கிரம நாயக்கா கூறியுள்ளார்.

(க-60)

## தொழிலாளர் சங்க கூட்டம் நாளை திட்டமிட்டபடி நடைபெறும்

(ஈச்சமோட்டை)

ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்க யாழ். கிளையின் 32 வது பொதுக் கூட்டம் நாளை 27 ஆம் திகதி வியாழக்கிழமை நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்தப் பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம், சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி இ. தெய்வேந்திரம் ஆகியோர் கலந்து கொள்வார்.

இத்துடன் 2000 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம் பெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(க-59-5)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/இளையதம்பி இந்துவித்தியாலயத்தில் தரம்-9 வகுப்பு இன்று 26ஆம்திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு புதிதாக திறக்கப்படவுள்ளது. நல்லூர் கோட்டக் கல்வி அதிகாரி திருமதி எஸ். காங்கேயன் பிரதமஅதிதியாக கலந்து வகுப்பு அறையை திறந்து வகுப்பை ஆரம்பித்து வைப்பார்.

## வடக்கு-கிழக்கு விவசாய அபிவிருத்திக்கு 3 கோடி 20 இலட்சம் டொலர் உதவி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் விவசாயத் துறையை முன்னேற்றுவதற்காக 3 கோடி 20 இலட்சம் டொலர் வழங்கப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா, மகாணத்தின் பிரதம செயலாளர் ஜி. கிருஷ்ண மூர்த்தி ஆகியோர் உலக வங்கியின் பிரதிநிதிகளோடு அண்மையில் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் முடிவில் இவ்விபரம் தெரிவிக்கப்பட்டது.

அம்பாறை தேவலங்க அமைப்பு மண்டபத்தில் அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த இக் கூட்டத்தில், உலகவங்கியின் இலங்கை ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் மற்றும் உலக வங்கி தென்அமெரிக்க, வட அமெரிக்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உலகவங்கி, முன்னர் வடக்கு கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட சமயங்களில் அரசாங்கத்துக்கு நேரடியாகவே உதவிவந்தமையும்.

இம் முறை இது தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாண அரசசார்பற்ற நிறுவனங்களின் ஆலோசனைகளையும் அறிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(க-9)

## தண்ணீர் தாங்கி அன்பளிப்பு

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை, பாஷையூர்ப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து பாண்டியன்தாழ்வு அன்னாள் ஆலயத்தில் தங்கியிருந்த மக்களுக்கு குடி நீர் விநியோகிப்பதற்காக நீர்த் தாங்கி யொன்றை ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் அன்பளிப்புச் செய்துள்ளது.

அத்துடன் இந்த மக்களின் சுகாதாரத்தைப் பேணவும், இடநெருக்கடியைப் போக்கவும் ஆலயத்தின் அருகிலுள்ள வீடு ஒன்று, ஆலயப் பங்குத்தந்தையினால் கியூடெக் நிறுவனத்தின் உதவியுடன் கிடுகினால் வேய்ந்து கொடுக்கப்பட்டுள்ளது.

இங்கு 26 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்கியுள்ளனர்.

(செ-59)

## தோழர் வரதராஜப் பெருமாளை கட்சியிலிருந்து நீக்கிய செயல்

# தன்னிச்சையான ஓர் முடிவாகும்

### புழல் அகதிமுகாம் ஈ. பி. ஆர். எல். எவ். தோழர்கள்

(சென்னை)

தோழர் வரதராஜப் பெருமாளை கட்சியிலிருந்து நீக்கியதாக சுரேஷ் பிரேமச் சந்திரன் விடுத்த அறிக்கையானது கட்சியின் அரசியற்பீடம் மற்றும் மத்திய குழுவின் முறைப்படியான அனுமதியை பெறாத தான்தோன்றித்தனமான நடவடிக்கை என்பதை அறிந்து அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம்.

இவ்வாறுஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் புழல் அகதி முகாமிலிருக்கும் 105 தோழர்கள் கையொப்பமிட்டுஅனுப்பியஅறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

நாம் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்கள். 1990 இல் ஏற்பட்ட நெருக்கடிக்சூழ் நிலைகள் காரணமாக இந்தியாவிற்கு வந்தவர்கள். நாம் இங்கு வந்து ஒரு சில மாதங்களிலேயே எமது பெருமதிப்பிற்குரிய தோழர் பத்மநாபா அவர்களும் மேலும் தோழர்கள் கிருபா, யோகசங்கரி உட்பட 12 தோழர்களும் சென்னையில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட கோரச் சம்பவம் நிழந்தது. அன்றிலிருந்து எம்மைத் துரத்தத் தொடங்கிய துரதிஸ்டம் இன்றும் எம்மை விட்டபாடில்லை. கஸ்டங்கள் துன்பங்கள் மத்தியிலும் சாதாரண மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் சார்ந்த எமது கட்சியின் இலட்சியங்கள். நோக்கங்களை முன்னெடுத்துச் செல்வதற்கான காலம் கனியும் என்றுதான் இவ்வளவு துன்பங்களையும் அனுபவிக்கிறோம்.

எம்மில் பலர் வெங்காயக் குடோன்களில் வேலைசெய்கின்றனர். பலர் சீமெந்து மூடை ஏற்றும் கூலி வேலைகள் செய்கின்றனர். பலர் மேசன் வேலை செய்கின்றனர். இவ்வாறாக நாம் பெரும் எண்ணிக்கையினர் இன்னமும் தமிழகத்தில் அகதி முகாம்களிலும் வெளியிலும் வாழவேண்டியவர்களாக உள்ளோம்.

1993 கட்சியின் காங்கிரஸ் கூட புழல் அகதி முகாமில் தான் நடந்தது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அந்த மாநாட்டை நடாத்துவதில் எங்களின் பங்களிப்பும் இருந்தது என்பதனை கட்சியின் உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்த வேண்டியேற்பட்டுள்ளமை கவலைக்குரிய ஒன்றாகும். பிராந்திய மாநாடுகளில் மண்டபம், திருச்சி, புழல் ஆகிய அகதி முகாம்களிலிருந்தும், வெளியிலிருந்தும் தோழர்கள் பங்குபற்றினோம்.

எமது கருத்துக்களையும் உள்ளடக்கியே 1993ம் ஆண்டு கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் அரசியல் திட்டமும் யாப்பும் வெளியிடப்பட்டது.

ஆனால் காங்கிரஸின் பின்னர் மிக நீண்ட காலமாகவே கட்சியின் தலைமை எங்களுடன் தொடர்பற்றதாகவே இருந்தது. ஆனால் எங்கள் ஆழ்மனதில் எமது கட்சியும் தேசமும் எப்போதும் குடியிருந்தே வருகின்றன.

உட்கட்சி நிலைமைகள் தொடர்பாக தற்போதைய செய்திகள் எமக்கு எரிச்சலூட்டுவனவாகவும், வேதனையை ஏற்படுத்துவனவாகவும் இருக்கின்றன.

கட்சியைப் பாரதூரமாகப் பாதிக்கும் இந்த ஜனநாயக விரோத நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு சுரேஸ் அவர்களின் அம்முடிவை நாம் முற்றாக நிராகரிக்கிறோம்.

அதே போல் 2000 ஜனவரி 13, 14ந் திகதிகளில் கூட்டப்பட்ட கூட்டங்களையும் அவற்றின் முடிவுகளையும் நாம் நிராகரிக்கிறோம். வவுனியாவில் கூட்டப்பட்ட இக் கூட்டங்கள் கட்சியின் காங்கிரஸ் என்ற போர்வையில் உட்கட்சி ஜனநாயகத்துக்கு விரோதமான முறையிலும், கட்சியின் ஸ்தாபன சட்டதிட்டங்களுக்கு ஒவ்வாத வகையிலும் மேற்கொள்ளப்பட்ட ஒரு கட்சி விரோத சதிச் செயல் என்றே கருதுகின்றோம்.

கட்சிக்காக இதுகால வரை பலவற்றை இழந்த அர்ப்பணித்தநாங்களோ, வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பல்வேறு பகுதிகளிலும் ஆபத்துக்களின் மத்தியிலும் நின்று கட்சிக்காக உழைத்துக் கொண்டிருக்கும் பெரும்பான்மையான கட்சியின் உறுப்பினர்களோ, பெரும்பான்மையான மத்தியகுழு உறுப்பினர்களோ பங்கு பற்றாத வகையில் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கூட்டங்களை கட்சிக் காங்கிரஸ் என்று கூறுவது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

தமிழகத்தின் பல பகுதிகளில் அகதிகளாக இருக்கும் நாம் மற்றவர்களைப் போல் தொழில் தேடியோ அல்லது படிப்புத் தேடியோ வேறு பொழுது போக்குக் காரணங்களுக்காகவோ இங்கு வரவில்லை. கட்சியின் வளர்ச்சியிலும், நலனிலும் அக்கறையுள்ள எங்களுக்குத் தெரியாமல் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கூட்டங்கள் இங்குள்ள பெரும்பான்மைத் தோழர்களின் மனங்களைப் புண்படுத்தும் வேலையேயாகும்.

நாம் நமது மதிப்புக்குரிய தோழர் பத்மநாபாவின் வழிப்படி நடப்பவர்கள். எமது எதிர்பார்ப்பெல்லாம் தன்னலமில்லாத அர்ப்பண உணர்வு கொண்ட கட்சியும் தலைமையுமே.

நாங்கள் சொல்லொணாக் கஸ்டங்களுக்குள் வாழும் போது, கட்சியின் நிதியும், வீடுகள் மற்றும் சொத்துக்களும் சுரேஸ் பிரேமச்சந்திரனதும், அவருடைய குடும்பம், அவரது சகோதரர்கள் மற்றும் அவரின் நெருங்கிய நண்பர்களின் பெயரில் இருப்பது அத்தனை பேருடைய தியாகங்களையும் கொள்ளையடிக்கும் கொச்சைப்படுத்தும் வேலையாகும்.

எனவே கட்சிச் சொத்துக்களை தனிப்பட்டவர்களிடமிருந்து எடுத்து கட்சியின் நிர்வாகத்துக்குப் பொதுவானவை ஆக்க வேண்டும் என்றும் மிகவிரைவில் கட்சியின் காங்கிரஸைக் கூட்டி சரியான தலைமைத்துவத்தை வழங்குமாறும் கட்சியின் பொறுப்பு வாய்ந்த தோழர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

அதேவேளை மக்களுக்கு சரியான வழிகாட்டும் தலைமைத்துவமாக ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி மீண்டும் தலை நிமிர்ந்து செயற்பட எங்களது உறுதியான பங்களிப்பை வழங்குவோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். [க]

### திருநெல்வேலிப் பகுதியில்

## சிறுமியை அடித்துத் துன்புறுத்திய ஆசிரியை பிணையில் செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

வீட்டு வேலைகளுக்கென அமர்த்திய சிறுமியை அடித்துத் துன்புறுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட ஆசிரியை ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபா காசுப் பிணையும் 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையும் தண்டனையாக விதிக்கப்பட்டது.

திருநெல்வேலிப் பகுதியில் ஓர் ஆசிரியையின் வீட்டில் இருவருடங்களுக்கு முன் வேலைக்கு அமர்த்தப்பட்ட மீசாலையைச் சேர்ந்த ஆறுமுகம் புஸ்பராணி என்ற 14 வயதுச் சிறுமியை நீண்ட காலமாக அடித்துத் துன்புறுத்தினார் என்ற குற்றச்சாட்டிலேயே நேற்று முன்தினம் அவ்வாசிரியை யாழ். நீதிவான் இ. த். விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

வழக்கு விசாரணைகளின் போது ஆசிரியைக்குப் பிணை வழங்குவது தொடர்பாகப் பொலிஸாரால் கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (கு-வ)

## சமாதான நீதிவான்களாக 500மருத்துவர் விரைவில் நியமனம்

தேசிய மருத்துவர்கள் 500 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டு அவர்களுக்கு விருது வழங்கி கௌரவித்து சமாதான நீதிவான் நியமனம் வழங்க சுகாதார சுதேச வைத்தியத் துறை அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இத் துறையில் குறிப்பிடத்தக்க சேவைகளைப் புரிந்த சிரேஷ்ட மருத்துவர்களுக்கே விருதுகளையும் சமாதான நீதவான் பதவிகளையும் வழங்கத்தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-14)

## மலசல கூடங்கள் அமைப்பு

இடைக்காடு மகா வித்தியாலயத்திற்கு ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் இரண்டு மலசல கூடங்கள் அமைக்கப்படுகின்றன.

ஆண்கள், பெண்களுக்கான இம் மலசலகூடங்கள்இரண்டு கட்டும் பணிகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 10 இலட்சம் ரூபா செலவில் இக் கட்டடங்கள் அமைக்கப்படுவதாக பாடசாலையின் உப அதிபர் தெரிவித்துள்ளார். (க-57)

## யாழ்- திருமலை கப்பல் சேவை புதிய கப்பல்கள் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் இடையிலான போக்குவரத்துச்சேவைகளுக்கென புதிதாக இரண்டு கப்பல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. வடக்கிற்கான மீளக்குடியமர்வு புனர்வாழ்வளிப்பு அதிகார சபைத் தலைவர் என். ஏ. ஒபடகே இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு பயணிகள் சரக்குக்கப்பல்கள் மூலம் அனுப்பப்பட்டபோது பலசிரமங்களை எதிர்கொண்டதாகவும்' சிரமங்களைத் தவிர்ப்பதற்காகவே புதிதாக பயணிகள் கப்பல்களை கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டது எனவும் அடுத்த மாதமளவில் இந்த கப்பல்கள் சேவையில் ஈடுபடலாம் என்றும் ஒபடகே மேலும் தெரிவித்தார்,

இதேவேளை புதிய கப்பல் சேவைக்கான நேர அட்டவணையும், பிரயாணக் கட்டணமும் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து அறிய வருகிறது, வ-கு)

### வடக்கு-கிழக்கிற்கான

## ஓவியக் கண்காட்சி ஏப்ரலில் கொழும்பில் இடம்பெறும்

[கொழும்பு]

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சு நடத்தும் இவ்வருடத்திற்கான ஓவியக் கண்காட்சியை கொழும்பில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வடக்குகிழக்கு மாகாண ஆளுநரின் கோரிக்கையின் பேரில் ஏப்ரல் மாத நடுப்பகுதியில் கொழும்பு கலாபவனத்தில் இக்கண்காட்சி நடைபெறவுள்ளது.

இதனை செயல் முறைப்படுத்து வதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று அண்மையில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் வடக்கு கிழக்கு மாகாண செயலர் டிவகலாலா தலைமையில் நடைபெற்றது,

இக்கூட்டத்திற்கு ஒவ்வொரு கல்வி வலயத்தில் இருந்தும் சித்திரபாட ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓவியக்கலை விற்பனர்கள், கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக அழைக்கப்பட்டிருந்தனர். [க-14]

## பாலம் திருத்தம்

(வரணி)

வரணி, வேம்பிராய் பிரதான வீதியில் உள்ள பாலம் திருத்தப்படுகின்றது. ஏற்கனவே ஆரம்பமான வேலைகள் பூர்த்தியாக வில்லை தொடர்ந்து இவ் வேலைகள் நேர்த்தியானமுறையில் நடைபெற்று வருகின்றது. இத்துடன் வீதியும் திருத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-28)

### அரசியல்,இலக்கியம்,சமயம்,கல்வி

## போன்ற துறைகளில் சேவை புரிந்தோரை இனம் கண்டு கௌரவித்தல் நிகழ்வு

(தென்மராட்சி)

இருபதாம் நூற்றாண்டின் அரசியல், சமூக, பொருளாதார, கல்வி, சமய, இலக்கியப் பணிகளில் தன்னிகரில்லாப் பணிபுரிந்த ஈழத்துப் பெருமக்களை இனங்கண்டு தேர்ந்தெடுத்து பகிரங்க அறிவித்தல் செய்வதற்கான நடவடிக்கையைத் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் மேற்கொண்டுவருகின்றது.

இதன் அடிப்படையில் பொதுமக்கள் மற்றும்பொது அமைப்புகளிடம் இருந்து கருத்துக் கணிப்பு ஒன்றினை நடாத்தவுள்ளதாக தமிழ் எழுத்தாளர் ஒன்றிய வட்டாரங்களில் இருந்து அறியப்படுகின்றது.

இலக்கியப் பணியைப் பொறுத்தமட்டில் திறனாய்வு, கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் போன்ற துறைகளில் தன்னிகரில்லாப் பணிகள் புரிந்தவர்கள் பற்றிய கருத்துக் கணிப்பும் மேற்கொள்ளப்படும்.

இக்கருத்துக்கணிப்பு தொடர்பான தகவல்களை தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவர் திரு. செம்பியன் செல்வன் 10, புதிய வீதி அத்தியடி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கச் செய்யும்படி ஒன்றியம் கேட்டுள்ளது. (க-77)


## ஆத்ம ஈடேற்றப் பூசை

மலர்வு: 1- 2 - 1924



உதிர்வு: 28-12-1999

காரைநகர் களபூமி, நந்தாவிலை

பிறப்பிடமாகவும், இல. 15/1முதலாம் ஒழுங்கை பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும்.

இல: 20 பெரியகடை ஆறுமுகம்ரெக்ரையில்ஸ் உரிமையாளருமாகிய சிவப்பேறடைந்த

### பொன்னயா ஆறுமுகம்

அவர்களுடைய ஆத்ம சாந்திக்காக நல்லூர் தேரடி முன்பாக அமைந்திருக்கும் அறுபத்துமூன்று நாயனார் குருபூசை மடத்தில் 27 - 1 - 2000 ஆண்டு வியாழக்கிழமை அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

ஆறுமுகம் குடும்பத்தினர்.

(கி-25)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப்பழி

- குறள்

# வலம்புரி

## எய்துவர் மேன்மை

இந்துக்கல்லூரி விவேகானந்தரின் பாதம்பட்ட கல்லூரி. வடபுலத்தில் சைவமாணவர்க் கென்று பெருமையுடன் பணி செய்வது. இங்கு சைவமும் தமிழும் கைவரப்பெற்ற பேரசான் சிவராமலிங்கம் கற்பித்து துணை முதல்வராய் இருந்திருக்கிறார். சபாலிங்கம் சபாரத்தினம் போன்ற பெருமைக் குரிய முதல்வர்களின் வழிநடத்தலுக்கு ஆட்பட்ட கல்லூரியின் பரிமாண வளர்ச்சி போற்றுதற்குரியது.

நேற்றைய தினம் விவேகானந்தரின் வருகை நாள் விழா வெடுத்தனர். சமய பூசாரம்பத்தோடு நிகழ்வு ஆரம்பித்தது. குன்றக்குடி அடிகளின் அவா நிறை வேறியது போல அமைந்த பூசை நிகழ்வு. சிறுவனொருவன் தலைமைதாங்கிவிழாவை நடத்திச் சென்றான். அவனது பணிவும் கம்பீரமும் போற்றத்தக்கது. பெரியோரைக்கனம் பண்ணி பாதம் பணிந்த நிலை முட்டற எதிர்காலம் தழைக்கும் போல் இருந்தது. வங்கத்திலே வந்த சிங்கம்-சமயஞானி விவேகானந்தர் அவாவிய இளந்தலை முறையை ஒத்தவனாய் உறுதியாய் நின்றான்.

இசையும் தமிழும் ஒன்றித்த பூமி யாழ். மண். வீணாகானபுரம் என்பது அதன் பெயர் அந்த மண்ணிலே வாழ்வதற்குத் தகுதி படைத்தவர்கள் போல கல்லூரி பயில்கிறார்கள் அமைந்தமை பாராட்டத்தக்க தொன்று.

எங்கள் சமுதாயம், ஆண்மையும் அறிவும் பெற வேண்டும். சான்றோர் வழிநின்று பெருமையடைய வேண்டும். அவர்களது ஆத்ம ஆசி எங்களை வழிநடத்தும். பணிக்குப் பணிவு அணிகலன். அந்த வகையில் இன்றைய முதல்வரும், ஆசிரியர்களும் மாணவ சமுதாயத்தின் பிரகாசத்திற்கு உந்து சக்தியாக அமைவதும் மேன்மை கொள் சைவநீதி விளங்கிட வித்திட்ட நாவலனுக்கு ஆறுதலளிக்க விளங்கும் கலைக்கோயில் இது என்று சிந்திக்கும் அளவிற்கு சிறப்புறுவது கண்டு பாராட்டாமல் இருக்க முடியாது. வாழ்வியலின் நிறைவுத்தத்துவத்தோடு பல்கலையும் பயிலும் மாணவர்கள் பயிலகம் இது என்னும் போது பெருமை கொள்ளலாம்.

- அன்புடன் ஆசிரியர்

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட

# உடற் கூற்றியல் துறைக்கு பிரேதம் தருமாறு எம்.எஸ்.யூ. வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட உடற் கூற்றியல் துறை மாணவர்களின் செய்முறைக்கூற்றல்களுக்கு தேவையான பிரதங்களுக்குப்பெரும் தட்டுப்பாடு நிலவுவதனால் சமூகத்தின் அனைத்து தரப்பினரிடமிருந்தும் இறந்த உடல்களை அன்பளிப்புசெய்து உதவுமாறு யாழ். பல்கலைக்கழக மருத்துவ மாணவர் மன்றம் வேண்டுகோள்விடுத்துள்ளது,

செய்முறைப் பயிற்சிகளுக்குப் போதிய உடல்கள் இல்லாததனால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருவதாகவும், காலத்தின் தேவைகருதி மாணவர்களுக்கு உதவி செய்வதற்கு சமூக அமைப்புகள், வைத்திய அதிகாரிகள் மற்றும் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிகள் முன்வரவேண்டும் என்றும் மாணவர் மன்றம் அந்த வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை— மருத்துவ பீடத்துக்கு அண்மையில் சாவகச்சேரியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் தனது இறப்பின் பின் பிரேதத்தை மருத்துவ பீடத்துக்கு வழங்கியுள்ளார் என்றும் அந்த உடலை சாவகச்சேரியிலிருந்து மருத்துவ பீடத்தில் சேர்ப்பதற்கு உதவிய சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி, வைத்திய கலாநிதி எஸ். ஜமுனாநந்தனுக்கு எமது நன்றிகள் எனவும் அந்த வேண்டுகோளில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[கு-வ]

## றெஜினோல்ட் காலமானார்

லங்கா நவசமாஜக் கட்சியின் மூத்த உறுப்பினர் றெஜினோல்ட் மெண்டிஸ் காலமானார்.

சுகவீனமுற்ற நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இவர் அங்கு நேற்றுக் காலமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவரது விருப்பத்துக்கிணங்கப் பூதவுடல் மருத்துவக் கற்கை நெறிகளுக்காக இன்று கொழும்பு மருத்துவ பீடத்துக்கு கையளிக்கப்பட உள்ளதாகத் தெரியவருகிறது.

## இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இளம் பொருளியலாளர் மன்றம் நடாத்தும் கருத்தரங்குத் தொடர் 1 இன்று பி. பகல் 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறும்.

பல் தேசிய கம்பனிகளும் மூன்றாம் உலக நாடுகளும் என்ற தலைப்பில் சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் கே. அருளானந்தம் கருத்துரை வழங்குவார்.

(க)

## இளவாலை தபாற் கந்தோரில் ஊழியர் பற்றாக்குறை நிலவுகிறது

(இளவாலை)

இளவாலை தபாற் கந்தோரில் ஊழியர்கள் பற்றாக் குறை நிலவுகின்றது. இதனால் தபால் விநியோகமும் ஏனைய அலுவலக வேலைகளும் தாமதமாகவே நடப்பதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தபால் ஊழியர்களுக்கான நேர்முகப் பரீட்சையில் இளவாலைப் பகுதியில் இருந்து 7 பேர் விண்ணப்பித்திருந்தும் ஒருவரும் தெரிவு செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(க.12)

## கிராமிய வங்கி திறப்பு விழா

(இளவாலை)

கோண்டாவில் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் கோண்டாவில் தாவடிச் சந்திப் பகுதியில் அமைக்கப்பட்ட கிராமிய வங்கிக் கட்டடத் திறப்புவிழா நிகழ்வுகள் இன்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெறவுள்ளன.

சங்கத்தின் தலைவர் செ. செல்வராசா தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கு. சண்முகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

(கு-7-12)

## இல. திறந்த பல்கலைக்கழக சட்டநெறிப் பயிலுநருக்கான போட்டிப் பரீட்சை முடிவுகள் வெளியாகின

### 14 பேர் மட்டுமே சித்தி

(யாழ்ப்பாணம்)

இலங்கைதிறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய சட்ட நெறிப் பயிலுநருக்கான போட்டி பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளதாக மேற்படி நிலைய இயக்குநர் ச. நா. ஞானேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில். மேற்படி பரீட்சையில் சித்தியடைந்தோரின் பெயர் விபரங்கள் யாழ், பிரந்திய நிலையத்தில் பார்வையிடலாம் எனவும் 110 பரீட்சார்த்திகளில் 14 பேர் மட்டுமே சித்தியடைந்துள்ளனர். எனவும் தெரிவித்தார்-

முகாமைத்துவ டிப்ளோமாவிற்கு தோற்றிய 129 பேரில் 76 பேர் சித்தியடைந்துள்ளதாக இவர்களது பெயர் விபரங்களையும் பிராந்தி நிலையத்தில் பார்வையிடலாம் எனறு தெரிவித்துள்ளார்.

(க)

## விபரங்கள் கோரப்படுகின்றன

(மந்திகை)

இலங்கை கல்வி நிர்வாக சேவை இலங்கை, கணக்காளர் சேவை தொழில் நுட்ப உத்தியோகத்தர் சேவை ஆகிய சேவைகளில் உள்ள உத்தியோகத்தர்களின் விபரங்களை வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு கோரியுள்ளது.

மேலும் இந்த உத்தியோகத்தர்கள் தற்போது தொழில் புரியும் இடம் நியமனம் பெற்ற ஆண்டு, பதவி, சம்பள விபரம் விசேட தகைமைகள் முன்னர் சேவையாற்றிய இடம் போன்ற பல விபரங்களையும் கோரியுள்ளது.

(க-23)

## இந்திய முன்னாள் பிரதமர் குஜ்ரால் அடுத்த வாரம் இலங்கை வருவார்

அடுத்தவாரம் கொழும்பில் நடைபெற உள்ள சர்வதேச மனித உரிமைகள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திர் குமார் குஜ்ரால் அடுத்தவாரம் இலங்கை வரவுள்ளார்.

இவர் தனது விஜயத்தின் போது இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் உட்பட பல உயர் மட்ட அமைச்சர்களுடனும் பேச்சு நடத்தவுள்ளார்.

இவ் விஜயத்தின்போது இலங்கை இந்திய உறவுகள் குறித்தும், ஏனைய பல முக்கிய விடயங்கள் குறித்தும் இரு தரப்பினருக்குமிடையே கருத்துக்கள் பரிமாறப் படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(7)

## இந்துசமய அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் அறநெறிப் பாடசாலைகளுக்கான இந்துசமய அறிவுப் போட்டி இம்மாதம் 30 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு (புதிய நேரம்) யாழ். இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகும்.

மேற்பிரிவு, மத்திய பிரிவு என இரு பிரிவாக நடாத்தப்படவுள்ள இப் போட்டியில் தலையாழி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அறநெறிப்பாடசாலை மாணவர் 24 பேர் உட்பட பெருமளவு மாணவர்கள் பங்குபற்ற உள்ளனர்.

(க)

## இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்திய அணுகுமுறை மாறவேண்டும்

### வை. கோபாலசாமி

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக இந்தியாவின் அணுகு முறைகள் மறு பரிசீலனை செய்யப்படவேண்டுமென தமது கட்சி மத்திய அரசை வற்புறுத்துமென மறுமலர்ச்சி திராவிடமுன்னேற்ற கழக பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

திருச்சிராப்பள்ளியில் நேற்று பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் தனிஈழம் அமைவதில் தான் நிலையான நீடித்த சமாதானத்தை கொண்டுவர முடியுமென தெரிவித்தார்.

## இராசி பலன்

26.01.2000 புதன்கிழமை (தமிழுக்கு தை 12)

ஷஷ்டி அதிகாலை 5.31 வரை; அத்தம், வைகறை 3.20 வரை. சித்த யோகம், இராகு காலம் பகல் 1.06 முதல் 2.33 வரை, சுபநேரம் மாலை 5.36 முதல் 7.06 வரை.

**மேடம்:** மேலோர் சந்திப்பு, பண வரவு, இனிய காட்சி;

**இடபம்:** மன வேதனை, தாயார் கோபம், அலைச்சல்.

**மிதுனம்:** முரண்பாடு, தொழில் பாதிப்பு, வெறுப்பு.

**கடகம்:** தியாக உணர்வு, பண வரவு, பொதுப்பணி.

**சிங்கம்:** கடின வாக்கு, புத்திரர் கவலை, அகால உணவு.

**கன்னி:** மனச் சந்தோஷம், பதவி உயர்வு, குடும்ப சுகம்.

**துலாம்:** ஞாபக மறதி, அயலவர் கோபம், வீண் செலவு.

**விருச்சிகம்:** தொழில் லாபம், நண்பர் உதவி, சயன சுகம்.

**தனுசு:** எதிர்பாராத நன்மை, வாக்கு வசீகரம், பாராட்டு.

**மகரம்:** தொழில் கஷ்டம், குடும்ப வெறுப்பு, யோசனை.

**கும்பம்:** தடுமாற்றம், அநாவசியத் தலையீடு, நோய் உபாதை.

**மீனம்:** அபகீர்த்தி, வாக்குத் தவறுதல், கடன் பயம்.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

## புவியியற் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக புவியியல் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள 'சமுதாய சூழல்' - தொடர் - 1 கருத்தரங்கு இன்று மாலை 3 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வீ. கே, கணேசலிங்கம் தலைமையில் புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(கு)

## புதியவகுப்புக்கள் ஆரம்பம்

(வண்ணார்பண்ணை)

யாழ். இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் தரம் ஒன்பதிற்கான புதிய வகுப்பு இன்று புதன்கிழமை காலை 10. மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறும். இவ் வைபவத்தில் நல்லூர் கோட்டக் கல்வி அதிகாரிதிருமதி. எஸ். காங்கேயன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு புதிய வகுப்பின் கற்பித்தல் நிகழ்வுகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைப்பார். (க-14)

## புனரமைப்பு

(புலோலி)

விவசாயிகளின் நன்மை கருதி கரவெட்டிப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கட்டுவத்தை ஒந்திராயன் அணைக்கட்டு, ஐம்பதாயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகிறது.

இதற்கான நிதி, பிரமாண அடிப்படையிலான மூலதன நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(க-52)

# ஓயாத அலைகள்-3 தாக்குதலையடுத்து பஸ்சேவை ஸ்தம்பிதம்; பயணிகள் அவதி!

(வடமராட்சி)

விடுதலைப் புலிகளினால் 'ஓயாத அலைகள் - 3' தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து வடமராட்சி கிழக்கு மாசார், தளையடி மற்றும் செம்பியன்பற்று ஆகிய பகுதிகளுக்கான பளையூடான பஸ் சேவைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதாக அறியவருகின்றது.

தூர இடங்களிலிருந்துக் வடமராட்சி கிழக்குப் பகுதிகளுக்கு கடமை புரிவதற்கு செல்லும் அரச ஊழியர்கள் பலர் இதுவரை பஸ் மூலமே தமது பயணங்களை மேற்கொண்டிருந்தனர். தற்போது வெளியிடங்களிலிருந்து சைக்கிள் மூலமே பயணம் செய்ய வேண்டியுள்ளதாகவும், தாக்குதல்கள் தணிந்துள்ள போதிலும் பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (கு-வ)

# நியூ சவுத்வேல்ஸ் பல்கலைக்கழக பரீட்சை முடிவுகள் வெளியாகின!

(யாழ்ப்பாணம்)

அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் அனுசரணையுடன் கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் நடத்தப்பட்ட பரீட்சையின் முடிவுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டன.

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்காக நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தினால்நடத்தப்பட்ட பரீட்சையில் தரம்6 தொடக்கம் உயர்தர வகுப்பு மாணவர்கள் வரை தோற்றியிருந்தனர்.

கடந்த வருடம் நடத்தப்பட்ட இப்பரீட்சையில் வேம்படி மகளிர் கல்லூரியில் இருந்து தோற்றிய மாணவர்களில் 9 பேர் அதிவிசேட சித்திபெற்றுள்ளனர். அவர்களின் பெயர் விபரம் வருமாறு, கணிதப்பிரிவில் மேகலாமகிழ்ராஜா-ஆண்டு8 ஷாலினி பேரின்பநாதன் ஆண்டு-8, இராமவித்தியா இராமச்சந்திரன் ஆண்டு-9 சுகிர்தினி வினாயகவசீகரன் ஆண்டு-9, சங்கீதா இராஜதுரை ஆண்டு-11

விஞ்ஞானப் பிரிவில்: மயூரி குணநாதன் ஆண்டு-6, சிவதர்சினி சிறிஸ்கந்தராஜா ஆண்டு-6, மேரி நிரோசினி முத்துக்குமாரசாமி ஆண்டு-8 கமலினி சண்முகநாதன் ஆண்டு-8.

இதுதவிர விஞ்ஞானத்தில் 47 பேரும், கணிதத்தில் 57 பேரும், ஆங்கிலத்தில் ஒருவரும் விசேட சித்தி பெற்றுள்ளனர்.

# இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலய அர்ச்சகரின் வீட்டில் திருட்டு

(கட்டப்பிராய்)

இருபாலை கற்பகப் பிள்ளையார் கோவில் அர்ச்சகர் வீட்டில் நேற்று முன்தினம் இரவு நுழைந்த திருடர்கள் அங்கிருந்து 3 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

இவ்வாறு திருடப்பட்ட நகைகளுள் கற்பகப் பிள்ளையார் ஆலயத்தின் நகைகளும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இருபாலை விதானையார் ஒழுங்கையில் உள்ள வீட்டில் திருட முயன்ற போது வீட்டார் விழிப்படைந்ததால் திருடர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

இப்பகுதியில் கடந்த பல தினங்களாகத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவது குறித்து பொதுமக்கள் கவலை கொண்டுள்ளனர். (ந)

---

### ஒரே...

ராஜா பிரியா என்னும் மாணவியும் அவரது தாயாரும், சகோதரருமே இராவத்தினரால் கைது செய்யப்பட்டதாக அறியப்படுகிறது.

இவர்களது கைது குறித்து இராணுவத்தினரால் ரசீது எதுவும் வழங்கப்பட்டதாக தகவல்கள் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை.

இக்கைதினால் இப்பகுதியில் பதற்றம் நிலவுவதாக அறிவிக்கப்படுகிறது. [க. வ]

---

### தென்மராட்சி...

கொடுத்ததாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இப் பகுதி வயல்களில் அறுவடை வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருவதாகவும் மற்றும் விவசாய நடவடிக்கைகளில் இப் பகுதி மக்கள் வழமை போல் ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

---

### அரசும்..,

முக்கிய நிகழ்வாக அமையலாம் என்றும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (கு-வ)


## வீடியோப் பிரதிகளை (ஒரிஜினல்) CD மூலம் பதிவு செய்தல்

விஷ்ணுவின் வாடிக்கையாளருக்கு நற்செய்தி

உங்களது இல்லங்களில் நடைபெறும் மங்கள விழாப் பிரதிகள், மற்றும் விழாப் பிரதிகளை பல்லாண்டு காலம் சிறந்த முறையில் பாதுகாத்துக் கொள்வதற்கான ஒரே ஒருவழிமுறை ''கொம்பக்ற் டிஸ்க்'' CD முறைதான்.

இம்முறையில் குறைந்த தவணையில் பதிவு செய்து கொடுக்கப்படும்.

குறிப்பு:- இப்பிரதிகளை யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி கொழும்பிலும் எமது முகவரிடம் பெறலாம் மேலதிக விபரத்திற்கு.

## விஷ்ணு வீடியோ

K. K. S, R.D, கோண்டாவில்.

சி - 033


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000- ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தை

# நீதிமன்றிற்கு பயன்படுத்தும் முயற்சி கூட்டுறவாளர் மத்தியில் அதிருப்தி!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குவசதியாக யாழ்.வீரசிங்க மண்டபத்தை பயன்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்.குடா நாட்டில் இடம் பெற்ற பல்வேறு இராணுவ நடவடிக்கைகளிலும் வீரசிங்கம் மண்டபம் முற்றுமுழுதாக சேதமடைந்த நிலையில் கூட்டுறவாளர்களினாலும், அரச அதிபர், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆகியோரது முயற்சியினால் தற்போதுபுனரமைக்கப்பட்டு வருகின்றது.

நான்கு மாடிகளைக் கொண்ட இக் கட்டடத்தின் ஒரு மாடி மட்டுமே தற்பொழுது திருத்தப்பட்டு பால் காச்சப்பட்டுள்ளது.

இந் நிலையில் வீரசிங்க மண்டபத்தை மேல் நீதி மன்றத் தேவைக்குப் பாவிப்பதற்கு முயற்சி எடுப்பது கூட்டுறவாளர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதுடன் இக் கட்டட வேலை பூர்த்தி செய்யப்படுமா என்ற அச்ச நிலை கூட்டுறவாளர் மத்தியில் எழுந்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

---

### ஐந்து...

வெலிங்டன் (வயது 20) ஆகியோரின் சடலங்களே அடையாளம் காணப்பட்டவையாகும்.

கடந்த திங்கள் இரவு மன்னார் வைத்திய சாலையில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் பொலீசாரால் ஒப்படைக்கப்பட்ட ஐந்து சடலங்களில் மேற்படி இரண்டு சடலங்களும் உறவினர்களால் அடையாளம் காட்டப்பட்டது. ஏனைய சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

அடையாளம் காட்டப்பட்ட இரண்டு சடலங்களினதும் பிரேதப் பரிசோதனைகள் முடிவடைந்ததும் உறவினர்களிடம் ஒப்புடைக்கப்பட்டது. (கு-வ)

---

### வடக்கு...

யுள்ள கடிதத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி. முல்லைத்தீவு, மன்னார், வவுனியா வடவலயம் ஆகிய மாவட்டங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான புதிய பாடத்திட்ட இலவச பாட நூல்கள் இதுவரை வழங்கப்படவில்லை என்றும் தரம் 6 மாணவர்களுக்கான கணித பாடத்திற்குரிய நூல்களையும், தரம் 9 இற்குரிய கணிதம், விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் ஆகிய பாடங்களுக்குரிய நூல்களையும் தரம் 10 மாணவர்களுக்குரிய கணிதம், விஞ்ஞானமும் தொழில் நுட்பமும், வரலாறும் சமூகக் கல்வியும் ஆகிய பாடங்களுக்குரிய புதிய பாடத்திட்ட இலவச பாட நூல்களை அனுப்பி வைக்குமாறும் அந்தக் கடிதத்தில் அவர் கேட்டுள்ளார். (கு-வ)

---

### காவல்...

படுத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் என்றும் இதுபற்றிப் பொலிஸ் மா அதிபருடன் தொடர்பு கொண்டபோது விரிவான விசாரணைகள் நடாத்துவதாக பொஸ்மா அதிபர் உறுதியளித்துள்ளார் என்றும் தெரிவித்தார். இதேவேளை- 'கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் திடீர் திடீரென நடைமுறைப் படுத்தப்படும் ஊரடங்குச் சட்டத்தின் மூலம் அப்பாவித் தமிழ் மக்கள் வகை தொகையின்றி படையினரால் கைதுசெய்யப்படுகின்றனர். தடுத்து வைக்கப்படுவதுடன் கடும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவதும், மூன்றாந்தரப்பு பிரஜைகளாகத் தமிழர்கள் நடத்தப்படுகின்றனர்' என்று என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (கு-வ)

# பயண அனுமதிக்கு பாஸ் நடைமுறை மட்டக்களப்பிலும் அமுல்படுத்தப்படும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து கொழும்பிற்கு பயணம் செய்வதாயின் இனிமேல் பாஸ் எடுக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இப் புதிய நடைமுறை அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பயண அனுமதி குறித்து மட்டக்களப்பு தமிழ் முஸ்லீம் அமைப்புக்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளதோடு, இத்தகைய நடவடிக்கைகள் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்க வழிவகுக்கும் எனவும் தெரிவித்துள்ளன.

இது குறித்து மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கம்ஜனாதிபதியுடன் தொடர்புகொண்டு பாஸ் நடைமுறையை உடன் ரத்துச் செய்ய வேண்டுமெனக் கோரியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-60)

# தெனியாயவில் வங்கி-தபாற்கந்தோர் கொள்ளை முயற்சி முறியடிப்பு இருவர் பலி! 18 பேர் காயம்!

(கொழும்பு)

தெனியாய பகுதியில் நேற்று வங்கி, மற்றும் தபாற்கந்தோர் ஆகிய வற்றில் ஆயுதம் தாங்கியோரால் மேற்கொள்ளப்பட்ட கொள்ளை முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் ஏற்பட்ட மோதலில் இருவர் பலியானதுடன் 18 பேர் வரையில் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தோர் யாவரும் அருகில் உள்ள வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இச் சம்பவத்திலிருந்து இப் பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (வ-க)

# மட்டக்களப்பில் நெசவுத்தொழில் முற்றாக அழியும் நிலையில்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதான கைத்தொழிலான நெசவுத் தொழில் முற்றாக அழியும் நிலையில் உள்ளது.

இப் பகுதியில் ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான நெசவுக் கைத்தொழில்கள் இருந்துள்ளன, ஆனால் தற்பொழுது அவை ஐந்நூறாகக் குறைந்துள்ளன. இதனால் சுமார் ஒரு லட்சம் பேர் வேலை வாய்ப்பை இழந்துள்ளனர்.

நூல் விலையேற்றம், தாராளப் பொருளாதாரக் கொள்கை, இந்திய உற்பத்தியின் இறக்குமதி என்பவையே இம் மாவட்டத்தின் நெசவுக் கைத்தொழிலின் வீழ்ச்சிக்கான பிரதான காரணிகளாகுமென நெசவுத் தொழில் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (60-க-01)

# இன்று திறப்பு விழா

கல்வியங்காடு கட்டப்பிராய் கலைமணி சனசமூக நிலையம் மீள் புனரமைக்கப்பட்டு இன்று புதன்கிழமை பிற்பகல் 4. 30 மணிக்கு வலி. கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் திரு. குகதாஸனால் திறந்து வைககப்படும்.

# நாவலர் வீதி திருத்தப்படவில்லை பொதுமக்கள் பெரும் சிரமம்

(கல்வியங்காடு)

பொதுமக்களுக்கு தற்சமயம் பயன் படும் நாவலர் வீதி அநேக காலமாக திருத்தப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

இதனால் வாகனங்களும் பாதசாரிகளும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்

அத்துடன் பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் பெரும் சிரமத்திற்குள்ளாவதாலும் பொதுமக்கள் நன்மைகருதி சம்பந்தப்பட்டவர்கள் இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டால் பொது மக்கள் நன்மை அடைவார்கள் என்பது மக்களின் கருத்தாகும். (க-54)

# இளைஞன் மீது தாக்குதல்

(வரணி)

வரணி - இயற்றாலைப் பகுதியில் நேற்றுக்காலை தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் இளைஞன் ஒருவனைத் தாக்கியதாக தெரியவருகிறது.

பெற்றோர் முன்னிலையில் இவ்விளைஞன் தாக்கப்பட்டதாகவும் தாக்கப்பட்டதற்கான காரணம் தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மாப்பாணபிள்ளை திரவியநாதன் என்பவரே தாக்கப்பட்டவராவார் [க-28[

# கோப்பாய் இளைஞர் காங்கேசனுக்கு

கடந்த 18ஆம் திகதி உரும்பிராய் சந்திப் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட கோப்பாய் வடக்கு குசையப்பர் கோவிலடியைச் சேர்ந்த முருகையா விஜயநாதன் என்ற இளைஞர் கடந்த 20 ஆம் திகதி காங்கேசன் தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளார்.